# அரையாண்டு பொதுத் தேர்வு - டிசம்பர் 2019

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் | | | | | | | |

## பொதுத் தமிழ்

நேரம்:3.00 மணி மதிப்பெண்கள்:90

அறிவுரைகள்: (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப் பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்புகள்: (1) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி -I

14×1=14

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும்.

1) 'மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு' கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்;

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்

இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2) படத்துக்கு பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடி;



அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புனையைச் சுடும்

ஈ) காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

3) "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" - என்று பாரதி வெளிப்படுத்துவது.

அ) தனிக்குடும்பம் முறை ஆ) விரிந்த குடும்பம் முறை

இ) தாய் வழிச் சமூக முறை ஈ) தந்தை வழிச் சமூக முறை

4) உலகப் புவி நாள் எது?

அ) ஆகஸ்டு - 15 ஆ) நவம்பர் - 14

இ) ஏப்ரல் - 22 ஈ) டிசம்பர் - 23

5) சென்னை வெரும் நகரம் மட்டுமல்ல அது நம்பிக்கை மையம். காரணம் கூறுக.

அ) நேரடி மறைமுக வேலைவாய்ப்புக்களின் களம்

ஆ) மென்பொருள், வன்பொருள் வாகன உற்பத்தியில் பங்கு

இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை

ஈ) (அ), (ஆ,) (இ) அனைத்தும்

6) 'இலக்கியத்தில் மேலாண்மை' நூலின் ஆசிரியர் யார்?

அ) வெ.இறையன்பு ஆ) வீரசோழன்

இ) பக்தவத்சல பாரதி ஈ) உ.வே. சாமிநாதர்

7) இலக்கணக் குறிப்பு எழுதுக:
வளைஇ

அ) சொல்லிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை

இ) இசைநிறை அளபெடை ஈ) செய்யுளிசை அளபெடை

8) செம்பரிதி = செம்மை + பரிதி

அ) முன் நின்ற மெய் திரிதல் ஆ) இனம் மிகல்

இ) ஆதி நீடல் ஈ) ஈறுபோதல்

9) வினைத் தொகைக்கு உதாரணம்

அ) மறவா  ஆ) வளர்தலம்

இ) தினம் தினம்  ஈ) சல சல

10) நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்ப்பாடுகளைப் பெற்று முடியும் பா

அ) வெண்பா  ஆ) ஆசிரியப்பா

இ) கலிப்பா  ஈ) வஞ்சிப்பா

11) புணர்ச்சி விதி தருக.

எத்திசை = எ + திசை

அ) இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்.

ஆ) மவ்வீறு ஒற்றொழிந்து உயிரீறு ஒப்பவும்

இ) உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே

ஈ) ஈறுபோதல்

12) குறியீடுகளைப் பொருத்துக:

1) பெண்  i) சமாதானம்

2) புறா  ii) வீரம்

3) தராசு  iii) விளக்கு

4) சிங்கம்  iv) நீதி

அ) 1- (ii), 2 - (iv), 3 - (i), 4- (iii)  ஆ) 1- (ii), 2 - (iv), 3 - (iii), 4- (i)

இ) 1- (iii), 2 - (i), 3 - (iv), 4- (ii)  ஈ) 1- (iii), 2 - (i), 3 - (ii), 4- (iv)

13) சரியான நிறுத்தற் குறியீடு உள்ள சொல்லைத் தேர்ந்தெடுக்க.

அ) அவள் அக்காள் வீட்டிற்குச் சென்றாள்

ஆ) அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்

இ) அவள் அக்காள், வீட்டிற்குச் சென்றாள்

ஈ) அவள் அக்காள் வீட்டிற்குச், சென்றாள்

14) திசை எட்டும் என்ற மொழிப்பெயர்ப்பு இதழின் ஆசிரியர் யார்?

அ) பரலி சு. நெல்லையப்பர்  ஆ) சாந்தா தத்

இ) உத்தம சோழன்  ஈ) ஔவையார்

## பகுதி - II

### பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3×2=6

15) தண்டியலங்காரம் - குறிப்பெழுதுக.

16) நகரம் பட்டைத் தீட்டிய வெள்ளை வைரமாகிறது. - விளக்குக.

17) ஞாலத்தின் பெரிது எது?

18) கம்பராமாயணம் எத்தனை காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது? அவை யாவை?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×2=4

19) நடை அழகியல் பற்றி தொல்காப்பியம் கூறும் கருத்துக்களைக் குறிப்பிடுக.

20) சென்னையில் உள்ள மயிலாப்பூர் பற்றிய தனிச் சிறப்புகள் இரண்டு கூறுக.

21) பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

### பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7×2=14

22) சொல்லைப் பிரித்தும், சேர்த்தும் தொடரமைக்க: பலகை

23) படிமம் - வினைப்படிவம் - எடுத்துக்காட்டு கூறுக.

24) பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

1) இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு, நீயும் புரிஞ்சிக்கோ

2) ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்லு

25) தண்டியலங்காரம் எவ்வகை நூல்? தொடர்நிலை என்னும் வகை எதைக் குறிக்கிறது?
26) பாவிகம் - எடுத்துக்காட்டுடன் விளக்குக.
27) ஏற்ற இடங்களில் நிறுத்தற் குறியிடுக.
இளங்கோ அடிகள் சாத்தனாரிடம் முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே அவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்தால் கூறுக எனக் கேட்டார்.
28) ஏதேனும் ஒன்றினுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
1) செய்த 2) சாற்றி
29) மரபு பிழை நீக்கி எழுதுக.
கோவலன் மதுரைக்குச் சென்றது.
குதிரையும் யானையும் வேகமாக ஓடியது.
அவன் வெண் மதியிடம் பேசினாய்
சென்னையிலிருந்து நேற்று வருகிறான்
30) வெண்பாவில் ஈற்றுச் சீரில் இடம் பெறும் வாய்ப்பாடுகள் யாவை?

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

31) "செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்
செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்"
- இத்தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.
32) 'வருபவர் எவராயினும் நன்றி செலுத்து' - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
33) "யானை புக்க புலம் போலத் தானும் உண்ணான்
உலகமும் கெடுமே' - உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.
34) சிறுபாணாற்றுப்படையினை இயற்றியவர் யார்? நூற்குறிப்பு தருக. கடையேழு வள்ளல்களை குறிப்பிடுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

35) வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.
36) கடையேழு வள்ளல்கள் ஆண்ட நாடுகள் எவை?
37) பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம். விவரிக்கவும்.
38) பொருள் வேற்றுமையணியை எடுத்துக்காட்டு கூறி விளக்குக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×4=12**

குறிப்பு:- காதுகேளாத மாணவர்களுக்கு மட்டும் வினா எண் 40-க்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

39) இலக்கிய நயம் பாராட்டுக. ஏற்புடைய நயங்கள் மூன்றினை எடுத்தெழுதுக.
**பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி**
**பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க**
**ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்**
**உலகத்தில் தமிழ் மொழிக்கு நிகரும் உண்டோ?**
**கற்றுணர்ந்தே அதன் இனிமை காண்பாய் என்று**
**கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக்காட்டிந்**
**தெற்றென நம் அகக் கண்ணைத் திறந்து விட்ட**
**தெய்வக் கவி பாரதி ஓர் ஆசான் திண்ணம்.** -- நாமக்கல் கவிஞர்

40) **தமிழாக்கம் தருக:**
I make sure i have the basic good habits which include respecting my elders, greeting people when I meet them, wishing them well when departing, etc. I develop other good habits like writing, listening to music, dancing, singing, etc. which fulfil the needs of my soul.

குறிப்பு: செவி மாற்றுத் திறனாளிகளுக்கான மாற்றுவினா.
பின்வரும் பத்தியை கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

40) (அ) முதல் (ஈ) வரை
நகரங்கள் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானவையாகும். சமூகத்தின் கடந்தகால வளர்ச்சிக்கும் நிகழ்கால வாழ்விற்கும் அவை துணை நிற்கின்றன. தென்னிந்தியாவின் நுழைவு வாயில் என்றழைக்கப்படும் சென்னை தமிழகமெங்கும் பரவி வாழும் தமிழர்களின் பண்பாட்டு அடையாளம் இந்தியாவின் முதன்மை நகரங்கள் ஒன்றாகவும், தமிழகத்தின் தலைநகராகவும் திகழ்கின்ற சென்னையின் வரலாறும், வளர்ச்சியும் நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று.

**வினாக்கள்:**

அ) பன்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானது எது?

ஆ) தென்னிந்தியாவின் நுழைவு வாயில் என அழைக்கப்படும் நகரம் எது?

இ) நகரங்கள் சமூகத்தில் எவ்வாறு துணை நிற்கின்றன?

ஈ) நாம் அறிய வேண்டிய சிறப்புகள் எவை?

41) பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்தெழுதுக.
திணை விதைத்தவன் திணை அறுப்பான்
வினை விதைத்தவன் வினை அறுப்பான் - பழமொழியை விளக்கி எழுதுக.

**(அல்லது)**

நிழலின் அருமை வெயிலில் தெரியும்.

42) வெண்பாவிற்குரிய இலக்கணம் யாது?
தளை கூறுக. வெண்பாவின் வகைகள் கூறுக.

43) பின்வரும் தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

1) வாழைக் காட்டில் குயில்கள் அலறிக் கொண்டும் காகங்கள் கூவிக் கொண்டும் இருந்தன.
2) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக் குட்டியும் கண்டேன்.
3) ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.
4) பனை மட்டையால் கூறை வைத்திருந்தனர்.

## பகுதி - IV

**3×6=18**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

44) அ) சிலப்பதிகார நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் எவ்வாறு கூறுகிறார்?

**(அல்லது)**

ஆ) குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வைச் சுட்டிக் காட்டுக.

45) அ) மயிலை சீனி.வெங்கடசாமி அவர்களின் சிறப்பை விளக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) தந்தையும் தாயும் பணிக்குச் செல்லும் சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

46) அ) முதல் கல் என்ற துணைப் பாடக் கதையை விளக்கி எழுதுக. **(அல்லது)**

ஆ) கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன - இது குறித்து உன் கருத்தைக் கூறுக.

## பகுதி - V

**4+2=6**

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.**

47 அ) காய் நெல்லறுத்துக் ................ என்று தொடங்கும் புறநானூறு செய்யுளை எழுதுக.

ஆ) ........................ அறிவு என முடிம் குறள்.

...............